முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் நந்தீஸ்வரர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

02.05.2019, வியாழக்கிழமை

1. **கனிவு கொண்டு மக்களை நோக்கி**
**கருணை வடிவாக அருளும்**
**கனிவேலவன் சக்தியான அரங்கனே**
**கலியுகத்தில் உன் பெருமை கூறி**
2. கூறியே நித்ய பிரசன்ன ஆசியை
குறையிலா **விகாரி தகர் திங்கள்**
**தெரியவே மூவாறோர் திகதி குரு வாரம்**
**(விகாரி வருடம் சித்திரை மாதம் 19ம் நாள் 02.05.2019, வியாழக்கிழமை)**
**தேசிகனுக்கு நந்தீஸ்வரர் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான தலைமை தருகின்ற
ஞானதேசிகன் ஞானவழியை
ஞாலமதில் உலகோர் ஏற்று வர
4. வருகவே மக்களிடை தெளிவும்
வல்லமையான மனபலமும் கூடும்
முருகா எனும் செபதபம் பெருக
முழுமையான மாற்றம் காண்கும்
5. காண்கவே நல்சக்தி அருளும்
கலியுக இடரையே மாற்றும்
உண்மை ஆன்மீக நெறியாம்
உயர்வான சுத்த சன்மார்க்க நெறியை
6. நெறியை கடைப்பிடித்து வர
நிலவுலகோர் வழுவாது ஏற்க
வறுமை நிலை உலகை பற்றா
வளமான மழை வளம் பெருகி
7. பெருகியே நீர்நில வளமும்
பிசகில்லா பசுமை வளம் பெருகி
தருமநிலை மக்கள் ஏற்று
தன்னார்வ தொண்டு வளரக் கூடும்
8. கூடவே சமத்துவ சமதர்ம
குளறுபடி என்பதே இல்லாத
நாடெங்கும் மத நல் இணக்கமும்
ஞானவான்கள் எனும் அளவில்
9. அளவிலே மக்களெல்லாம் தேறி
ஆறுமுக ஞானி விரும்புகின்ற
உலக மாற்றம் நடந்தேறியே
உலகமெங்கும் எதிர்மறை செயல்கள் விலகி

10. விலகி அமைதி பாதுகாப்பு
வினவிட தருமநெறிபடவே
உலகமெங்கும் பெருமாற்றம்
உயராசான் வழி நடந்தேறும்

11. தேற்றம் தரும் அரங்கா வாழ்க
திருவருள் காட்டும் அரசா வாழ்க
ஆற்றல்பட உம்மை வணங்கவே
ஆறுமுகன் ஞான ஆட்சி மலரும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் நந்தீஸ்வரர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

எல்லையில்லாத கருணையுடன் மக்களை கனிவாக அழைத்து அருள் செய்கின்ற முருகப்பெருமானின் சக்தி வடிவமாக நின்றருளும் அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனே, அற்புதங்கள் நிறைந்த உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி, விகாரி வருடம் சித்திரை மாதம் 19ம் நாள் 02.05.2019, வியாழக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே நந்தீஸ்வரர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் நந்தீஸ்வரர்.

நாட்டினில் நல்லாட்சியாளர்களை தந்தருளும் வல்லமைமிக்க ஆறுமுக அரங்கரின் ஞானவழிகளை உலக மக்களெல்லாம் முழுமனதாய் ஏற்றுக் கொண்டு கடைப்பிடித்துவர, மக்களிடையே தெளிவும், வல்லமைகளும், மனோபலமும் உருவாகிடும். முருகா, முருகா, முருகா என்றே ஜெபதபங்களை மக்களெல்லாம் அதிகமாக செய்து வரவர, நாட்டினில் முழுமையான மாற்றங்கள் உண்டாகும். உலகமெலாம் அருள்சக்தி பெருகி கலியுகத்தின் துன்பங்களை எல்லாம் அகற்றிவிடும்.

உண்மை ஆன்மீக நெறியாகிய அரங்கன் அருளும் தூயநெறியான உயர்வுமிக்க சுத்த சன்மார்க்க நெறியினை மக்கள் கடைப்பிடித்து வந்தால், மக்கள் தவறாமல் தூயநெறியில் நடந்து வந்தால் உலகினில் உள்ள வறுமை நிலைமைகள் எல்லாம் மாறி, வறுமையற்ற தேசம் உருவாகும், மழை வளமும் பெருகி, வளம் குன்றாத தேசமாக ஆகி நீர்நில வளமும் பெருகி, நாடெங்கும் பசுமை வளம் பெருகிடும்.

அரங்கமகான் கூறும் தருமநெறிகளை ஏற்று அவரவரும் தருமங்களைச் செய்து தன்னலம் இல்லாமல் பொதுநலமாய் தொண்டுகளை செய்து வருகின்ற நல்ல சூழ்நிலைகள் நாட்டினில் பெருகிடும். பக்தியும், தருமமும், தன்னலமற்ற தொண்டும் பெருக பெருக, மக்களிடையே உள்ள போட்டி, பொறாமை, பாகுபாடுகள் எல்லாம் மறைந்து மக்களிடத்து பேதாபேதங்களும் மறைந்து சமத்துவம் பெருகும், சமதர்மம் உண்டாகும். குளறுபடியான சூழல்கள் மாறி நல்லிணக்கம் உண்டாகும், நாடெங்கும் மத நல்லிணக்கம் உண்டாகும். மக்களிடத்து ஞானநிலை உண்டாகி அறிவு தெளிவும் உண்டாகி, ஞானவான்கள் போல மக்களெல்லாம் தேறி ஞானவான்களாக ஆகி, அரங்கமகா தேசிகனார் அவதரித்ததின் நோக்கத்தின்படி அரங்கர் விரும்புகின்ற உலக மாற்றமும் தடையின்றி நடந்தேறி கலியுகமும் மாறி ஞானயுகமாக மாறும், சூழ்நிலைகள் விரைந்து உண்டாகும்.

உலகமெங்கும் உள்ள எதிர்மறையான, தீவிரவாத செயல்கள் எல்லாம் விலகி, உலகமெங்கும் அமைதியும், பாதுகாப்பும் பெருகி உலகமெங்கும் தருமச்செயல்கள் அதிகமாகி உலகின் தருமபலமே உயர்ந்து பெரும் நல்மாற்றங்கள் உலகமெங்கும் உண்டாகும்.

**உயர்வான முன்னேற்றங்களை நல்மாற்றங்களையும் கருணையோடு உலகினில் அருளும் ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே வாழ்க வாழ்க. திருவருள் காட்டுகின்ற ஞான அரசே வாழ்க வாழ்க. ஆற்றலுடன் பக்தி கொண்டு அரங்கா உம்மை உலகோர் வணங்க வணங்க ஆறுமுகனின் ஞானஆட்சி உலகினில் உண்டாகுமப்பா** எனக் கூறுகிறார் மகான் நந்தீஸ்வரர்.

–சுபம்–